

திருப்பத்தூரில் நடைபெற்ற சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். மேடையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மாவட்ட அவைத் தலைவர் அ. கணேசன்,துணை செயலாளர்கள் த.சேங்கைமாறன், கே.எஸ்.எம்.மணிமுத்து , திருமதிஜோன்ஸ்ருசோ, காரைக்குடி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் செந்தில் ஆகியோர் உள்ளனர்.

‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ கடலூர் கிழக்கு மாவட்டம்

# சிதம்பரம் தொகுதியில் பொதுக்கூட்டம்: கோவி.செழியன் சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர், பிப். 17 -

நாடாளுமன்ற தேர்தலையொட்டி முதல்வர், கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” என்ற முன்னெடுப்பில் “பாசிசம் வீழட்டும்! இந்தியா வெல்லட்டும்!!என்ற தலைப்பில் இன்று (17.02.2024 - சனிக்கிழமை) சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதியின் சார்பில் மாபெரும் பொதுக் கூட்டம் மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில், (காட்டுமன்னார்கோவில் இருந்து மீன்சுருட்டி செல்லும் வழியில்) மாலை 5.00 மணிக்கு, கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் அரியலூர் மாவட்ட தி.மு.க. செயலாளர்,



போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

பெரம்பலூர் மாவட்ட செயலாளர் குன்னம் இராஜேந்திரன், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கா.சோ.கண்ணன் ஆகி யோர் கலந்து கொள்கின்றனர். தி.மு.க. தலைமை கொறடா கோவி.செழியன் சிறப்புரை ஆற்றுகின்றார்.

அதுசமயம், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட காட்டுமன்னார்கோயில், சிதம்பரம் மற்றும் புவனகிரி ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், ஒன்றிய குழுத்தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்,

இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்று ச்சூழல் அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி, அயலக அணி, அணி, தொழிலாளர் முன்னே ற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், பூத் கமிட்டியைச் சேர்ந்த BLA2, BLC பொறுப்பாளர்கள் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்கின்றனர்.

‘உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டம்!

# இராணிப்பேட்டையில் க.பொன்முடி சிறப்புரை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

இராணிப்பேட்டை, பிப். 17-

‘உரிமையை மீட்க ஸ்டாலினின் குரல்’ பொதுக்கூட்டம் இன்று மாலை இராணிப்பேட்டையில் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அது வருமாறு:-

அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதி சார்பில் மாபெரும் பரப்புரை கூட்டம் இன்று (17.02.2024 - சனிக்கிழமை) மாலை 05.00 மணி அளவில் இராணிப்பேட்டை முத்துக்கடை அருகில் கூட்டம் நடை பெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு நான் (இராணிப்பேட்டை



மாவட்ட தி.மு.க செயலாளர் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தலைமை தாங்குகிறேன். வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ., வரவேற்புரை ஆற்று கின்றனர்.

மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாநில நெசவாளர் அணி துணை தலைவர் ஓ.ஏ.நாகலிங்கம், மாநில கொள்கைப் பரப்பு துணை செயலாளர் டி. கென்னடி, நாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் பிரம்மபுரம் பழனி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் திருத்தணி தொகுதி நிர்வாகிகள், காட்பாடி தொகுதி நிர்வாகிகள் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர்.க. பொன்முடி சிறப்புரை ஆற்றுகின்றார்.

மேலும் செயற்குழு நகர, ஒன்றிய செயலாளர்கள் பொதுக்குழு பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சிமன்றத்தின் பிரதிநிதிகள் மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள், வணிகர் பெருமக்கள், தாய்மார்கள், ஆயிரக்கணக்கானோர் கலந்து கொள்கின்றனர்.

வேலூர் மாவட்ட தி.மு.க. பொருளாளர் சி.நரசிம்மன் நன்றி கூறுகின்றார்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கழக சட்டத்துறை சார்பில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் 2024 நாடாளுமன்றத் தேர்தலுக்கான “வார் ரூம்” திறப்பு விழா மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது . மாநில சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி., பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் ஆகியோர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

